**FIRST INFORMATION REPORT** | **TAMIL NADU POLICE**

**முதல் தகவல் அறிக்கை** | INTEGRATED INVESTIGATION FORM-I

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்) C 8102070

1. District : திருச்சி PS: ல.ஒ.த.பிரிவு திருச்சி Year: 2019 FIR No. 3/2019 Date 21.02.2019
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7(a)

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 21.2.19 Date to :
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை

Time Period : Time from : 1115 hrs. Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 21.2.19 Time : 16.00 hrs.
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral : Computerised Report
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: 68 KM North West
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : A. [illegible] (b) Father's/ Husband's Name : [illegible]
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 22.06.82 (d) Nationality : Indian (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : [illegible] (g) Address : 57, [illegible] தெரு, காட்டுப்புத்தூர்(வ), தொட்டியம் வட்டம், திருச்சி மாவட்டம்.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

மணிவண்ணன், கிராம நிர்வாக அலுவலர், காட்டுப்புத்தூர், தொட்டியம் வட்டம், திருச்சி மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: தாமதமில்லை
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

* GCP 240-34(Type-2) 90.000 Cps -21 3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்கு சிறப்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், இன்று 21.02.2019 மாலை 16.00 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திருச்சி மாவட்டம், தொட்டியம் வட்டம், காட்டுப்புத்தூர் அஞ்சல், பள்ளிவாசல் தெரு, கதவு எண்.57-இல் வசித்து வரும் (லேட்) ஆறுமுகம் மகன் கருணாகரன் என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று, அது குறித்து சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, இயக்குநரகத்திற்கு தெரிவித்து, அந்த புகார்மனு குறித்து முதல் கட்ட விசாரணை செய்து, புகார் மனுவில் கூறப்பட்டுள்ள திருச்சி மாவட்டம், தொட்டியம் வட்டம், காட்டுப்புத்தூர் கிராம நிர்வாக அலுவலர் திருமதி.மணிமேகலை மற்றும் புகார்தாரர் திரு.கருணாகரன் ஆகியோர்களின் முன் நடத்தைகள் பற்றி இரகசிய விசாரணை செய்யப்பட்டது. இன்று 21.02.2019 இரவு 18.30 மணிக்கு திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, குற்ற எண்.3/2019 சட்டப்பிரிவு 7(a) ஊழல்தடுப்பு (Amendment)சட்டம்2018-ன்படி வழக்கு பதிவு செய்தேன்.

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

A. Karunakaran 21-02-19

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

G. [signature] 21. 2. 19
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 21.2.19
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும். நேரமும் FA 5 hrs.

Name: பெயர் G. SAKTHIVEL
Rank: நிலை INSPECTOR OF POLICE No. எண் .........
VAC
TRICHY.

<u>திருச்சி ஊ.த.க. பிரிவு கு.எண்.03/2019ன் முதல் தகவல் அறிக்கை தொடர்ச்சி.......</u>

புகார்மனுவின் விபரம் பின்வருமாறு. அனுப்புநர் ஆ.கருணாகரன், த/பெ.ஆறுமுகம்(லேட்), 57, பள்ளிவாசல் தெரு, காட்டுப்புத்தூர் அஞ்சல், தொட்டியம் வட்டம், திருச்சி மாவட்டம். பெறுநர் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, திருச்சி அய்யா, நான் திருச்கி மாவட்டம், தொட்டியம் தாலுக்கா, காட்டுப்புத்தூர் கிராமம், பள்ளிவாசல் தெருவில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் 12ம் வகுப்பு வரை படித்துவிட்டு, கூட்டுறவு மேலான்மை பட்டய படிப்பு படித்துள்ளேன். நான் கார் டிரைவர் வேலை செய்துவருகிறேன். என் தாயார் பெயர் நாகலெட்சுமி. என் தந்தை ஆறுமுகம் சடந்த 02.12.2001 அன்று இறந்துவிட்டார். என் தாயார் திருமதி நாகலெட்சுமியின் உடன் பிறந்த மூத்த சகோதரன் திரு.குமரவேல், என் தந்தை இறந்தபின்பு, குமரவேலிடமிருந்த காட்டுப்புத்தூர் பள்ளிவாசல் தெருவில் உள்ள சர்வே எண்.86/34ல் கதவு எண்.56/57ல் வீட்டு மனையுடன்(250ச.மீ.) கூடிய ஓட்டு வில்லை வீடு(69.49ச.மீ), கூரைவீடு(62.53ச.மீ)இணைந்ததை என் தாயார் நாகலெட்சுமி பெயருக்கு செட்டில்மெண்டு பத்திரம் செய்து கொடுத்து அது, காட்டுபுதுார் சார் பதிவாளர் அலுவலகத்தில் எண்.465/2013 என கடந்த 28.03.2013 அன்று பதியப்பட்டுள்ளது. எனது தாயார் பெயரில் பத்திரபதிவு செய்து எங்களது அனுபவத்தில் இருந்து வருகிறது. மேற்படி வீட்டுமனைக்கு(நத்தம்) பட்டா வேண்டி கடந்த 26.09.2018 அன்று என் தயார் நாகலெட்சுமி பெயரில், காட்டுப்புத்தூர் விஏஓ திருமதி.மணிமேகலை அவர்களை நேரில் சந்தித்து மனு செய்தோம். பின்னர் நான் கடந்த 2018 ஆண்டு அக்டோபர் மாதம் கடைசியில் நான் காட்டுப்புத்தூர் விஏஓ அலுவலகம் சென்று காட்டுப்புத்தூர் விஏஓ திருமதி.மணிமேகலையை சந்தித்து பட்டா மனு தொடர்பாக கேட்டபோது, அவர் தற்போது எனக்கு சிறுகுறு விவசாயிகள் கணக்கெடுப்பு சம்மந்தமாக நிறைய வேலை இருக்கிறது, நீங்கள் இரண்டு மாதம் கழித்து வந்து பாருங்கள் என்று கூறினார். நான் அதன்படி கடந்த 2019 ஜனவரி கடைசியில் சென்று காட்டுப்புத்தூர் விஏஓ திருமதி.மணிமேகலையை சந்தித்தேன். அவர் தற்போதும் விவசாயிகள் சம்மந்தமாக கணக்கெடுப்பு செய்து வருவதாகவும், பிப்ரவரி கடைசி வாரத்தில் வந்து பார்க்க கூறினார். இதற்கிடையில் என் தாயார் இதுவரை பட்டா கிடைக்காததால் கடந்த 04.02.2019 அன்று தொட்டியம் வட்டாட்சியர் அலுவலகத்தில் வீட்டு மனையுடன் கூடிய வீட்டிற்கு பட்டா வேண்டி விண்ணப்பித்தார். நான், மனு சம்பந்தமாக ஆவணங்களை எடுத்துகொண்டு, 21.02.2019ம் தேதி காலை 11.15 மணியளவில் காட்டுபுதுாரில் உள்ள கிராம நிர்வாக அலுவலர் அலுவகத்திற்கு சென்று, காட்டுப்புத்தூர் கிராம

நிர்வாக அலுவலர் திருமதி.மணிமேகலை நேரில் சந்தித்து விபரம் கேட்டேன். அம்மனுவின் அடிப்படையில், நான் மனுவில் தெரிவித்திருந்த தகவல்கள் மற்றும் சம்மந்தப்பட்ட ஆவணங்களை என்னிடம் வாங்கி பரிசிலினை செய்தார். இந்த மனுவை விசாரிக்க, உங்களுக்கு பட்டா கிடைக்க நான் ஏற்பாடு செய்ய, எனக்கு தனியா ரூ.5000/= பணம் கொடுத்துடுங்க என்று சொன்னார். உடனே நான், அவங்களிடம் எதுக்கு மேடம் 5000 ரூபாய் கேட்கிறிங்க, பீஸா என்று கேட்டேன். அதுக்கு வி.ஏ.ஓ மணிமேகலை என்னிடம், இந்த 5000 ரூபாய் எனக்கு தனியா கேட்கிறேன், இந்த 5000 ரூபாய் கொடுத்தாதான், உங்களுக்கு பட்டா கிடைக்க சீக்கிரம் ஏற்பாடு பண்ணுவேன், இல்லைன்னா மனுவை கிடைப்பில் போட்டுவிடுவேன், பட்டா கிடைக்கிறது ரொம்ப கஷ்டம் என்று சொன்னார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை இருந்தாலும், அப்போதைக்கு நான் அவங்களிடம், சரிங்க மேடம் நீங்க கேட்ட பணத்தை ஏற்பாடு பண்ணிக்கிட்டு வந்து உங்களை பார்க்கிறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். எனவே என்னிடம் ரூ.5,000/= லஞ்சமாக கேட்ட காட்டுப்புத்தூர் கிராம நிர்வாக அலுவலர் திருமதி.மணிமேகலை மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு Sd.... (A.Karunakaran) 21-02-2019. Submitted to the Court of Hon'ble Special Judge for the Prevention of Corruption Act 1988 cases, Trichy:-. Received this report today (21.02.2019) at 16.00 hrs. made Preliminary Enquiry and registered a case in Trichy V&AC Cr.No.3/2019 u/s 7(a) of the Prevention of Corruption (Amendment) Act 2018 at 18.30 hrs on 21.02.2019. Sd... (G.Sakthivel) 21.02.2019 Inspector of Police, V&AC, Trichy.

G. [signature] 21.2.19
(G.SAKTHIVEL)
Inspector of Police,
V&AC
Trichy.